2025 நவம்பர் மாதம் 05 – ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

எம் .சி .ஓ .பி. நெம்பர் : 212/2019

2025–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 05 – ஆம் தேதி புதன்கிழமை மனுதாரர் தரப்பு சாட்சியாகிய RW2 நபரின் வாக்கு மூலம்

(1969–ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.C.லதா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | RW2 – நாராயணசாமி |
| தந்தை பெயர்: | சன்னாசி பிள்ளை |
| ஊர்: | வீரபாண்டி |
| வட்டம்: | தேனி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | சிறப்பு சார்பு ஆய்வாளர், வீரபாண்டி காவல்நிலையம். |
| வயது : | 57 |

தேதி : 05.11.2025.

முதல் விசாரணை: –

நான் இந்த மனுவில் 3ம் எதிர்மனுதாரர் தரப்பு கூடுதல் சாட்சியாவேன். நீதிமன்ற அழைப்பாணையின்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். விபத்து சம்பந்தப்பட்ட புகார் மனுவின் உண்மை நகல் கொண்டுவந்துள்ளேன். அந்த புகார் மனுவின் உண்மை நகல் **எ.ம.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்து சம்பந்தமாக தாக்கல் செய்துள்ள குற்றவியல் வழக்கில் கண்ட சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையில் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டிவந்த ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சொல்லப்பட்டுள்ள நிலையில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதற்கான மோட்டார் வாகன சட்டப்பிரிவு குறித்து

சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், அந்த குற்றவியல் வழக்கை புலன் விசாரணை செய்த ஆய்வாளர் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையில் குறிப்பிடவில்லை.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் வீரபாண்டி காவல்நிலையத்தில் எந்த வருடம் முதல் எந்த வருடம் வரையுள்ள காலங்கட்டங்களில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் அயல்பணியாக ஒரு மாத காலமாக சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வீரபாண்டி காவல்நிலையத்தில் குற்ற எண்.226/2019 வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும்போது நான் அந்த காவல்நிலையத்தில் பணிபுரியவில்லை. வீரபாண்டி காவல்நிலையத்தில் விபத்து சமயத்தில் காவல்நிலையத்தில் இருந்த பொறுப்பு அலுவலர் யார் என்றால் சார்பு ஆய்வாளர் திரு.அசோக் ஆவார். எ.ம.சா.ஆ.5 புகாரில் புகார் அளிக்கப்பட்டவரின் பெயர் முத்துராஜ் என்றால் சரிதான், அந்த முத்துராஜூக்கு பெரிய சுருளியப்பன் மகன் பிச்சைமணி என்பவர் போன் மூலம் தகவல் சொல்லித்தான் மேற்படி புகார் கொடுத்ததாகவும், விபத்து குறித்து தெரிந்துக்கொண்டதாகவும் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். விபத்து குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். காவல் ஆய்வாளர் மற்றும் சார்பு ஆய்வாளர் உத்தரவின்பேரில் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 05.11.2025 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.11.05 18:13:27 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி (FAC), தேனி.
05.11.2025